தொழிலில் அதிகமாகப் பழக்கம் இல்லாதவர்களுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா ? எவ்வளவு பேருக்கு எந்தெந்தத் தொழிற் சாலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே பணி புரிபவர்களின் எண்ணிக்கை அப்போதைக்கப்போது சிறைச்சாலைகளில் இருப்பவர் களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். எந்தெந்த சிறைச்சாலை களில் எவ்வளவு பேர் இதிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. இந்தப் பயிற்சி பெரும்பாலும் சென்னை, மதுரை சேலம், கோவை, திருச்சி, பாளையங்கோட்டை, கடலூர், வேலூர் போன்ற இடங்களில் அளிக்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : மத்திய சிறைச்சாலைகளில் கைதிகள் வேறு என்னென்ன கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்? கற்று வெளியே வந்த பிறகு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கார்ப்பண்டரி தொழிற்சாலை இருக்கிறது, துணி உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை இருக்கிறது. விவசாய வேலைகளில் ஈடுபடுத்தும் வாய்ப்பும் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணி நெய்ய பயிற்சி அளிப்பதுபோல் கோரைப்பாய் நெய்கின்ற பயிற்சியும் அளிக்கப்படுமா ? இப்போதே அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

Soil and agricultural studies in Cauvery Delta

* 200 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the findings of the United Nations Development Programme of the soil and agricultural studies in Cauvery Delta area?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நில நீர்த்திட்டத்தின் இரண்டாம் நிலை யாக 1969–72 வரை காவிரி கயவாய்ப் பகுதியில் நிலநீர் ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஐக்கியநாடுகள் நிறுவனப்பணியாளர்கள், நில-நீர்ப்பணியில் அவர்களுக்கு நிகரான நம்நாட்டுப் பணியாளர்கள் ஆகி யோரின் இணைந்த முயற்சியில் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு

ஏற்புக்காக ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டது. ஐக்கியநாடுகள் நிறுவனம் இந்த அறிக்கைக்கு ஏற்பு அளித்த பின்னரே விவரங்கள் வெளியிடப்படலாம்.

திரு. கே. கந்தசாமி : மதுரை மாவட்டத்தில் நீர்வளம் குறைவாக இருக்கிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, கேரளத்தில் கடலில் வீணாகச் சென்று கலக்கும் தண்ணீரைத் தமிழகத்தில் மதுரை மாவட்டத்திற்குத் திருப்பிவிட கேரள அரசாங்கத்தோடு நம்முடைய அரசு பேச்சுவார்த்தை நடத்த திட்டம் உண்டா ? அது என்ன நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மூலக் கேள்விக்கும் நீங்கள் கேட்கின்ற துணைக் கேள்விக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது ?

தஞ்சை மாவட்டத்தில் வாய்க்கால்கள் தூர் எடுத்தல்

* 201 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள "ஏ" பிரிவு வாய்ககால்கள் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை தூர் வாரப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உழவர்கள் ஆண்டு தோறும் குடிமராமத்தின்கீழ் "ஏ" வகுப்பு வாய்க்கால்களில் தூர் வாரவேண்டும். ஆனால் இப்பணி நீண்ட காலமாகச் செய்யப்படவில்லை. எனவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள "ஏ" வகுப்பு வாய்க்கால்களில் தூர் வாரும் பணியை நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அதன் விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	தூர் வாரப்பட்ட அல்லது தூர் வாரப்பட வேண்டிய 'ஏ' வகுப்பு வாய்க்கால்களின் எண்ணிக்கை.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை
1964	123	ரூ. 5 லட்சம்
1971-72	555	ரூ. 10 லட்சம்
1972-73	547	ரூ. 7·5 லட்சம்